# யாவர்க்குமாம் கல்வி



உதிரா துரைராஜன்

# யாவர்க்குமாம் கல்வி

முனைவர் **உத்ரா துரைராஜன்**
இயற்பியல் துறைத் தலைவர்
துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி
அரும்பாக்கம், சென்னை – 600 106.

**ஜோதி பதிப்பகம்**
நெ. 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு
முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037.

**நூல் விவரம்**

தலைப்பு : **யாவர்க்குமாம் கல்வி**

ஆசிரியர் : முனைவர் **உத்ரா துரைராஜன்**

உரிமை : © ஆசிரியருக்கு

பொருண்மை : கல்வி

முதற்பதிப்பு : திசம்பர் 2022

அளவு : 1/8 டெம்மி

பக்கங்கள் : 42

விலை : ரூ. 200/–

வெளியீடு : **ஜோதி பதிப்பகம்**, 2/1067, 11 ஆவது தெரு,
2 ஆவது குறுக்குத் தெரு
முகப்பேர் மேற்கு, சென்னை – 600 037.
கைபேசி : 9940190616

ISBN No : 978-81-958085-4-0

Title : **YAVARKUMAM KALVI**

Author : **Dr. UTHRA DORAIRAJAN**

Copy Right : © Author

Subject : Education

First Edition : December 2022

Book Size : 1/8 Dummy Size

Pages : 42

Price : Rs. 200/-

Published by : **JOTHI PUBLICATIONS**
2/1067, 11th Street, 2nd Cross Street
Mugappair West, Chennai - 600 037.
Mobile : 9940190616

ISBN No : 978-81-958085-4-0

**Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College**
(Autonomous - Affiliated to the University of Madras)
Gokul Bagh, 833 Periyar E.V.R. High Road, Arumbakkam, Chennai - 600 106
Phone : 044 - 23635101, 23635102 Fax : 044 - 23635103
E-mail : dgvoffice@gmail website : dgvaishnavcollege.edu.in

மதிப்புறு முனைவர் **அசோக்குமார் முந்த்ரா**
கல்லூரிச் செயலர்

## வாழ்த்துரை

ஒரு நல்லாசிரியரின் முக்கியப் பண்பு, தான் கற்றதை அழகாக எடுத்துரைத்தல். அதுவும் கற்பவரின் குணமும் இயல்பும் திறனும் அறிந்து அதற்கேற்றபடி கற்பித்தல் எல்லாருக்கும் வராது. அது கைவந்த ஒருவர்தான், கடந்த பதினைந்து ஆண்டுகளாய் எங்கள் கல்லூரியின் இயற்பியல் துறையின் தலைவியாக அதை வழிநடத்தி, வெற்றிப் பாதையில் பயணிக்கச் செய்யும் முனைவர் உத்ரா துரைராஜன். ஒரு நல்ல ஆசிரியை, திறனுடைய நிர்வாகி, மாணவச் செல்வங்களை மட்டுமல்ல சக ஆசிரியர்களையும் அரவணைத்து வழிநடத்துபவர்.

உலகிலுள்ள மனிதர்கள் யாவரையும் உறவெனப் போற்றுபவன்; உடல், மனம், சொல் இவற்றில் அறமெனத் தூய்மை காப்பவன்; பிறர் துன்பத்தைத் தன் துன்பமாகப் பார்ப்பவன் உண்மையான வைஷ்ணவன் எனும் படியானப் பாதையில் நன் மாணவர்களை உருவாக்கும் குறிக்கோளுடன் செயல்படுகிறது எங்கள் துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி.

வருங்கால வளமான இந்தியாவை உருவாக்கும் அறிவாற்றல் மிக்க மாணவர்களை உருவாக்குவதே எங்கள் கல்லூரியின் நோக்கம். இதற்குத் தங்களின் பலம் எது, திறன் எதுவென்ற புரிதலை மாணவர்களிடம் விதைக்க வேண்டும். பலருக்குள் உள்ள திறனை வெளிக்கொணர அசாத்திய பொறுமையும் இவற்றைப் பற்றிய ஆழ்ந்த புரிதலும் ஒருவருக்குத் தேவை. நூலாசிரியர் நுட்பமான இந்தப்புரிதல் உடையவர் என்பதனை **"யாவர்க்குமாம் கல்வி"** புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு சொல்லும் நமக்குச் சொல்லும். நேர்த்தியாக வந்துள்ள இந்தப் புத்தகம் பல ஆசிரியர்களை நிச்சயம் சிந்திக்கத் தூண்டும் என்று நான் நம்புகிறேன். இந்த நல்முயற்சிக்கு என்னுடைய வாழ்த்துக்கள்.

**Dwaraka Doss Goverdhan Doss Vaishnav College**
(Autonomous - Affiliated to the University of Madras)
Gokul Bagh, 833 Periyar E.V.R. High Road, Arumbakkam, Chennai - 600 106
Phone : 044 - 23635101, 23635102 Fax : 044 - 23635103
E-mail : dgvoffice@gmail website : dgvaishnavcollege.edu.in

முனைவர் **சேது. சந்தோஷ்பாபு**
கல்லூரி முதல்வர்

## அணிந்துரை

மாணவர்களின் பலத்தைப் புரிந்து கொண்டு அதை வளர்ப்பதுடன், அவர்களின் பலவீனத்தை அவர்களே தெரிந்து கொண்டு அதற்குத்தக்கபடி தங்களின் பாதையை அமைத்துக் கொள்ள உதவுவது ஒவ்வொரு ஆசிரியரின் கடமை என்பது என் நம்பிக்கை. என்னுடைய வகுப்பில் மட்டுமல்லாமல் நான் வழிநடத்தும் NCC மாணவர்களிடமும் உள்ள திறமைகளைக் கண்டுபிடிக்க வழிவகைகளை வகுத்துக் கொண்டே இருப்பேன். இக்கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியப் பெருமக்கள் ஒவ்வொருவரிடமும் உள்ள தனித்திறமைகளைக் கல்லூரி முதல்வர் என்கிற நிலையில் நான் கண்டு கொண்டு, அதற்கு ஏற்றபடி அவர்களுக்குப் பொறுப்புகளைப் பகிர்ந்து தரும் பொறுப்பு என்னுடையது. இது ஒரு இமாலய பணியும் கூட. ஒவ்வொரு வகுப்பிலும் இதுபோன்ற கடமை ஆற்றுபவர்கள் நம்முடைய ஆசிரிய ஆசிரியைகள். இயற்பியல் துறைத் தலைவி முனைவர் உத்ரா துரைராஜன் எழுதியுள்ள "**யாவர்க்குமாம் கல்வி**" எனும் இந்தப் படக்கதைத் தொகுப்பு இக்கருத்தை மிக அழகாகப் பிரதிபலிக்கிறது.

பேராசிரியை உத்ரா துரைராஜன் அறிவியல் ஆசிரியையாக மட்டுமின்றி, அறிவியல் புத்தகங்களை மொழிபெயர்த்தல், நூற்றுக்கணக்கான ஆசிரியர்களுக்குப் பணிமனைகள் மூலம் கற்பித்தலில் புதிய உத்திகளைச் சொல்லித் தருதல், குழந்தைகளுக்கானப் புதுவித அறிவியல் பாடங்களை வடிவமைத்தல், கற்றல் குறைபாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல், அறிவியல் வரலாறு பற்றிக் கட்டுரைகள் எழுதுதல், இந்திய விஞ்ஞானிகள் வரலாற்றைக் காணொளிகள் மூலமும் எழுத்து மூலமும் பொது மக்களுக்குத் தெரியப்படுத்துதல் என அறிவியல், கல்வி, மேடைப் பேச்சு மற்றும் எழுத்து எனப் பன்முகம் கொண்டவர்.

ஒரு சிறந்த ஆசிரியையாய்த் தன் மாணவர்களை வெற்றிப்பாதையில் செல்ல ஊக்குவிப்பதைப் போலவே, திறன்மிக்க நிர்வாகியாய்த் தன்னுடைய துறையில் உள்ள பிற ஆசியர்களையும் எழுத்து, ஆராய்ச்சி, மேடைப் பேச்சு, காணொளி வடித்தல் என வழிகாட்டுபவர். இத்துறையின் மாணவர்களும் ஆண்டுதோறும் அறிவியலைப் பொதுமக்களிடம் எடுத்துச் செல்வதில் தங்கள் ஆசிரியர்களுடன் இணைந்து செயல் வீரர்களாய் வலம் வருகின்றனர். அறிவியல் புலத்தில் இது எளிதான ஒன்றன்று. மாணவர்களின் திறனறிந்து அவர்களிடம் அதற்கு ஏற்றபடி செயல்களை ஒப்படைக்கும்போதுதான் இது சாத்தியம். அவர்கள் இதனைச் செய்வார்கள் என்று நம்புவதோடு ஒவ்வொரு மாணவ மாணவியிடமும் ஏதோ ஒன்று ஒளிந்துள்ளது என்று நம்புவதும் அந்த நம்பிக்கையின் பேரில் செயல்படுவதற்கும்கூட ஒருவித நம்பிக்கை தேவைப்படுகிறது. நம்பிக்கை தானே வாழ்க்கை!

இந்த நம்பிக்கையை விதைக்கும் கதைதான் **'பறக்கக் கற்றுக் கொண்ட குட்டி பல்லியின் கதை'**. எல்லா குழந்தைகளுக்கும் குறிப்பாக மாற்றுத்திறன்கள் உடைய கோடானகோடி குழந்தைகளுக்கும், அவர்களுடைய பெற்றோருக்கும் நம்பிக்கை விதைக்கும் வகையில் எழுதப்பட்டுள்ள மிகச்சிறந்த ஒரு கதை இது.

தேர்வு முறைகளும் வகுப்பறைகளும் பல சமயங்களில் நம் ஆற்றலை முடக்கிப் போட்டுவிடுகிறது என்பதும் உண்மைதான். என்றாலும் இன்று, கல்வி முறையில் மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டேதான் இருக்கின்றன. அதற்கு ஏற்றவாறு கல்விப் புலத்தில் தன்னாட்சி முறையில் இதற்கானப் பல திட்டங்கள், செயல்பாடுகள் தொடர்ந்து வந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையில் பன்னறிவு தளத்தில், அதாவது Multiple Intelligence என்பதை வெளிக்கொணரும்படி பல செயல்பாடுகளை, பல நிகழ்வுகளை, பலப்பல புதுமைகளைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டு வருகிறது எங்கள் கல்லூரி. செயலாற்றலும் ஊக்கமும் மிக்க ஆசிரியர்கள் இருப்பதால்தான் இவையெல்லாம் சாத்தியமாகின்றன. அந்த விதத்தில் 'விலங்குகள் பள்ளி' என்பது ஒவ்வொருவரையும் இந்தப் பாதையில் தொடர்ந்து பயணிக்கச் செய்யும் உந்துசக்தியாக இருக்கும் என்பதில் ஒரு சந்தேகமும் எனக்கு இல்லை.

கல்விப் புலத்தில் இயங்கும் ஆசிரியர்கள் மட்டுமின்றி, ஒவ்வொரு மாணவரும் அவர்களின் பெற்றோரும் என அனைவரும் வாசிக்க வேண்டிய புத்தகம் "யாவர்க்குமாம் கல்வி" என்றே நான் நினைக்கிறேன். இந்தச் சீரிய முயற்சிக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# முன்னுரை

எந்த ஒரு கருத்தையும் ஆழ்ந்து கற்க சோதனைகள் செய்து பார்த்தல் அவசியம். அதுவும் அறிவியல் கோட்பாடுகள் மனதில் பதிய இதுவே வழி. எல்லோருக்கும் கல்வி என்பதில், அறிவியல் சோதனை முறைகள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதைத் தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டு பயணிப்பவர் பத்மஸ்ரீ அரவிந்த் குப்தா அவர்கள். பல ஆயிரக்கணக்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சிகளைத் தந்தவர், பல புத்தகங்களை எழுதியவர். வலைத்தளம் வந்தபின், நூற்றுக்கணக்கான அறிவியல் சோதனை முறைகளைச் செய்து காண்பித்து, அவற்றை வலையொளியில் (YouTube) ஏற்றியவர். ஆங்கிலம், இந்தி மொழிகளைத் தாண்டிப் பல இந்திய மொழிகளில் இவை தன்னார்வலர்கள் பலரால் டப்பிங் செய்யப்பட்டு மிகப்பெரிய கற்பித்தல் களஞ்சியமாக இது இருக்கிறது. இவருடைய www.arvindgubtatoys.com எனும் வலைதளத்தில் கல்வி சார்ந்த எண்ணிலடங்கா புத்தகங்களைப் படிக்கலாம். நாட்டின் மூலைமுடுக்குகளில் இருக்கும் மாணவ மாணவியரும் இவற்றைத் தினமும் பயன்படுத்துகிறார்கள். பேரறிஞர் அரவிந்த் குப்தா தந்த ஊக்கத்தில் நான் பல காணொளி களையும் சில புத்தகங்களையும் தமிழில் மொழிபெயர்க்க ஆரம்பித்தேன். உங்கள் கையில் இப்போது இருக்கும் யாவர்க்குமாம் கல்வி அவர் பரிந்துரைத்த இரு சிறிய புத்தகங்களைத் தழுவி எழுதிய ஒரு தொகுப்பு.

பலவித கற்றல் வழக்கங்கள் உள்ள மாணவச் செல்வங்களை நாம் தினமும் பார்க்கிறோம். ஏன், நாமே ஒரு காலத்தில் பள்ளியில் படிக்கும்போது, விதவிதமாக கற்கும் வழக்கங்கள் உடையவர்களைப் பார்த்திருக்கிறோம்தானே! எழுதி எழுதிப் படிப்பவர்கள் ஒருபுறம், பந்தைச் சுவற்றில் அடித்துக் கொண்டே அம்மாவைப் புத்தகம் வாசிக்கச் சொல்லி காதால் கேட்டு மனப்பாடம் செய்பவர்கள் இன்னொருபுறம். புத்தகத்தை ஒரே புரட்டில் அப்படியே மனப்பாடம் செய்பவர்கள், பாடக் கருத்துகளை வண்ணவண்ணக் கோலமாய் வரைந்து புரிந்து கொள்பவர்கள், வகுப்பறையில் எழுதிவைத்த முக்கிய குறிப்புகளைப் படித்து மதிப்பெண் வாங்குபவர்கள் என வெவ்வேறு விதமான மாணவர்களை என்னுடைய ஆசிரியப் பணியில் சந்தித்திருக்கிறேன். எல்லோரும் ஒன்றுபோல் கற்பதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் நினைவில் வைத்திருக்க வேண்டும். கூடவே, பள்ளியில் சுமாராகப் படித்த சில மாணவர்கள் கல்லூரியில் எல்லாவற்றிலும் கோப்பை அள்ளிக் கொண்டு வருவதும் உண்டு.

வகுப்பில் சராசரியாகவே இருந்துவிட்டு, வேலையில் சக்கைபோடு போடுபவர்களையும் நாம் பார்ப்பதுண்டு. Slow bloomers பலரைப் பார்த்திருக்கிறேன், இவர்கள் மலர சற்று அதிக காலம் தேவைப்படுகிறது, சிலருக்குச் சூழ்நிலை மாற்றம் தேவை. வேறு சிலர் தன்னைப் பற்றிய புரிதல் வந்தபின் மடமடவென மேலே செல்வார்கள்.

'பறக்கக் கற்றுக் கொண்ட குட்டி பல்லியின் கதை' தன் பலத்தைப் புரிந்து கொள்ளும் ஒரு சின்ன பல்லியின் கதை. நம் மாணவியோ மாணவனோ, நம் குழந்தையோ, ஏன் சமயத்தில் நாமேதான் இந்தப் பல்லி! "உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம்" என உணர்ந்த பல்லியின் கதையைப் பிரெஞ்சு மொழியில் எழுதியவர் உலகப் புகழ்பெற்ற இயற்பியல் விஞ்ஞானி ஜீன் பெய்ரி பெட்டிட்.

எல்லோருக்கும் ஒரே மாதிரியான தேர்வு முறைகள், குறுக்கி அவர்களை மதிப்பிடுவது என்பன பேன்றவை சரியில்லையென்பது உலகம் முழுவதிலும் உள்ள ஆசிரியர்கள் ஒப்புக்கொள்ளும் ஒரு சங்கதி. ஆங்காங்கே மாற்றங்கள் வந்து கொண்டும் வளர்ந்து கொண்டும்தான் இருக்கின்றன. பெற்றோர்களும் பல சமயத்தில் தங்கள் பிள்ளைகளைப் பல தேர்வுகளுக்குள் தள்ளுவதையும் காண்கிறோம். இது தேவையா? எனும் கேள்வி எழுப்புவதே 'விலங்குகள் பள்ளி' எனும் கதை. ஜார்ஜ். எச். ரீவிஸ் என்பவரின் The Animal School எனும் ஆங்கிலக் கதையை ஒட்டி எழுதப்பட்டது இது.

இந்த இரண்டு கதைகளுமே பெற்றோர்கள் மனதிலும், ஆசிரியர்கள் மனதிலும் ஒரு சிறிய தாக்கத்தை உண்டு செய்யும் என்று நம்புகிறேன். இதை வாசிக்கும் மாணவர்கள் தங்களுடைய கற்றல் ஸ்டைல் என்ன என்பதைப் பற்றிச் சிந்திக்க முயன்றால் என் பணி இங்கு முற்றிற்று.


Dyslexia எனும் கற்றல் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ள எண்ணற்ற குழந்தைகளை வழி நடத்தி அவர்கள் ஒவ்வொருவரின் கற்றல் திறனைப் புரிந்து கொண்டு அதற்கேற்றபடி பாடங்களை, வினாத்தாள்களை, தேர்வு முறைகளை வடிவமைத்து இவர்களுக்குத் தோள் கொடுக்கும் Madras Dyslexia Association க்கும், இவர்கள் முன்னெடுக்கும் ஆசிரியர் பட்டறைகளில் தங்களைத் தீட்டிக் கொண்டு சிறப்பு ஆசிரியர்களாய் வலம்வரும், இந்தக் குழந்தைகளின் இன்னொரு தாயாய் விளங்கும் ஒவ்வொரு ஆசிரியைக்கும் இப்புத்தகம் சமர்ப்பணம்.

இதைப் புத்தக வடிவில் மிக நேர்த்தியாக எடுத்துவந்த எனக்கு ஊக்கம் தந்த முனைவர் சி.சதானந்தன் அவர்களுக்கு என் நன்றி. அட்டைப்படத்தை மிக அழகாக வரைந்து கொடுத்த என் மகன் எஸ். வருண் அவர்களுக்கும் மிக்க நன்றி.

உத்ரா துரைராஜன்

# பறக்கக் கற்றுக்கொண்ட ஒரு குட்டி பல்லியின் கதை

ஒரு சமயம் ஒரு குட்டி பல்லி வாழ்ந்து வந்தது.
அதற்கு நீ...ளமான கால்கள்.





எல்லா மிருகங்களும் அதைக்கேலி செய்தன.

குட்டி பல்லிக்கு ஒருநாள்
ஆச்சர்யமான ஆச்சர்யம்!
ஆமாம், அதன் நீள நீள
கால்களின் மேல்
இறகுகள் முளைக்க ஆரம்பித்தன.



தலைக்கு மேல் கூட






அட, வாலின் மேலும்




புளியங்கொட்டை அளவே
மூளை இருக்கும்
அதன் மாமா ஸ்டெகோஸாரஸ்





அத்தை மகன்
(ப்)டெரொடேக்டைல்



அந்த குண்டு பூசணி
ட்ரைஸெரடாப்ஸ் கூட
அவனை கிண்டல் அடித்தார்கள்.



வெளியில் தலைகாட்டவே
பயந்தான் அவன்.




ஒரு நாள், அந்த மிகப்பெரும் ஜூராஸிக் காட்டில்,
பூமியே அதிரும்படி பயங்கரமான காலடிச்சத்தம் கேட்டது.

கொடூர மிருகம் ஒன்று கோரமாய்
கத்தும் சத்தம்கூட கேட்டது.



பெரி... ய்...ய டைரனொஸாரஸ்,
அதோ... அங்கே தெரிந்தது.





அது தன் பாதையின் குறுக்கே வந்த ஒரு
வாத்து-மூக்கு டைனசாரை கிழித்துப் போட்டது.

அப்புறம் ஒரு பெண்
ப்ரோடொஸெரடாப்ஸை
துரத்தி அடித்தது.






அதன் முட்டைகளை
கபளீகரம் செய்து
சாப்பிடுவதற்காக.

அந்த சமயத்தில்தான் குட்டி பல்லி அதன் கண்ணில்பட்டது.
தான் பார்ப்பது கெட்ட கனவா என்று பயந்துபோய்,
கைகால் உதறல் எடுத்து நின்றுகொண்டிருந்தது குட்டிபல்லி.





ஐயோ பாவம் ! எப்படியாவது
தப்பித்துவிட வேண்டும் என்று ஓடப்பார்த்தால்,
அதனுடைய கால்கள் ஒத்துழைக்கவில்லை.



ஓரக்கண்ணால் பின்னாடி பின்னாடி பார்த்துக் கொண்டே ஓடியது குட்டி பல்லி. பூதம் போன்ற நிழல் தன்னை நோக்கியே வருவதைக் கண்டது.



டைரனாஸரஸின் கண்கள் குட்டிப் பல்லிக்குக் குறிவைத்தன. அது நாக்கை வழித்து சப்பு கொட்டியது.



இரண்டு பேருமே ஒன்றைக் கவனிக்கல்லை - கீழே செங்குத்தான பள்ளம் இருக்கும் மலைப்பாறையை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள்.




ஐயோ!
கீழே அதல பாதாளமாய்
இருக்கிறதே! கொடிய மிருகம்
நார் நாராய் கிழித்து
ருசிப்பதற்கு பதில்
பாறைகளில் அடிப்பட்டு
சாகலாம் என முடிவெடுத்தது
குட்டி பல்லி.


கால்களை விரித்து, கைகளை அகல நீட்டியது,
கண்களை இறுக மூடிக்கொண்டது.
வெளியில் ஹோவென
தாவியது.



நாவில் எச்சில் ஊற, கண்கள் மின்ன
துரத்திக்கொண்டு வந்த டைரனாஸாரஸ் குட்டி
பல்லியை பிடித்துவிடும் ஆசையில் அதன்மேல்
பொளேர் என்று பாய்ந்தது.




தான் இன்னமும் உயிரோடு இருப்பதை உணர்ந்த குட்டி பல்லிக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை.




றொம்பவும் துல்லியமாய் இல்லை. அதனால் என்ன? பரவாயில்லை. என்னால் கூட காற்றில் பறக்க முடிகிறதே.
ஐய்யய்யோ! எனக்கு எப்படி தரையிறங்க வேண்டும் எனத் தெரியாதே...
அப்பாடி! எப்படியோ தப்பித்துவிட்டேன் அடி பலமாயில்லை. கைகால் உடையவில்லை.
ஏய்.... உன் மேலே வளர்ந்துள்ளதே இறகுகள், அதனால் என்ன பயன்? ஒன்றுக்கும் உதவாது.
எப்படி பயன்படுத்தவேண்டும் என்று தெரியாததால்தான் நீ இப்படியெல்லம் பேசுகிறாய். இவை இருப்பது பற்றி எனக்கு றொம்பவும் மகிழ்ச்சி. இவைமட்டும் இல்லாவிட்டால், இந்நேரம் என் கதி அதோகதிதான்.

பறக்கக் கற்றுக்கொண்ட குட்டி பல்லி வானில் குஷியாய் பறந்து போனது.











முனைவர் உத்ரா துரைராஜன் சென்னை, அரும்பாக்கம், துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரியில் 26 வருடங்களாக இயற்பியல் துறையில் பணிபுரிந்து வருகிறார். துறைத் தலைவியாக கடந்த பதினைந்து வருடங்களாக இத்துறையை வழிநடத்தி வருகிறார். இவர் தலைமையில் பல அறிவியல் மாநாடுகள், கருத்தரங்குகள், ஆசிரியர் பணிமனைகள், பள்ளி மாணவர்களுக்கான செய்முறை அறிவியல் பயிலரங்குகள் பல நடத்தப்பட்டுள்ளன.

அன்றாட வாழ்க்கையில் அறிவியல், விஞ்ஞானிகளும் அவர்தம் கண்டுபிடிப்புகளின் வரலாறும் மற்றும் அறிவியலால் நம்நாட்டை உயர்த்திய பல அறிவியல் அறிஞர்களின் வாழ்க்கை முதலானவை பொதுமக்களுக்குச் சென்றுசேர இவர் தமிழில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். இவை பல அறிவியல் இதழ்களில் வெளிவந்துள்ளன. நிறமாலையியலிலும் அறிவியல் கல்வி சார்ந்தும் இவர் பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார்.

இந்திய அறிவியலில் சாதனைபுரிந்துவரும் பெண் விஞ்ஞானிகள் நால்வரின் வரலாற்றை மத்திய அரசின் 'விக்யான் விதுஷி' திட்டத்தின்கீழ் ஆங்கிலத்தில் வரைந்துள்ளார். ஹோமிபாபா அறிவியல் கல்வி மையத்தின் 'விக்யான் ப்ரதீபா அறிவியல் கையேடுகள்' இவருடைய தமிழ் மொழிபெயர்ப்பில் அணு ஆற்றல் துறையின் உதவியோடு வெளிவந்துள்ளன. உயர்கல்வி மானியக் குழுவின் உதவியுடன் 'கரிமக் காலடித்தடம்' பற்றிய செயல்திட்டம் (Project) ஒன்றை முடித்துள்ளார். இந்திய அரசின் உயிரிதொழில்நுட்பத் துறையின் நிதியுதவியுடன் மடிப்பு நுண்ணோக்கிகளைப் பள்ளிகளுக்கு எடுத்துச் சென்றுள்ளார்.

பேரறிஞர் அரவிந்த் குப்தா அவர்களின் அடியொற்றி, பல அறிவியல் காணொளிகளை இவர் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவை தமிழ்நாடு முழுமையும் உள்ள பல பள்ளி மாணாக்கருக்கு அறிவியல் கற்க ஊக்கமளிக்கிறது.

அறிவியலைப் பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில் எடுத்துச் செல்வது கல்வியாளர் கடமை என நினைத்துப் பயணிப்பவர். கற்றல் குறைபாடு உடைய குழந்தைகளுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் வழிகாட்டியாய் இருப்பவர். பல்துறை அறிவு, பல்லுணர்வுக் கற்றல், இல்லக் கல்விமுறை போன்றவற்றின் முக்கியத்துவத்தைப் புதியன விரும்பும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சொல்பவர். இவரிடம் பயின்ற மாணவ மாணவியர் மண்பயனுற பல்வேறு பணிகளில் நிறைவாக வாழ்கின்றனர்.


**ஜோதி பதிப்பகம்**

நெ. 2/1067, 11 ஆவது தெரு, 2 ஆவது குறுக்குத் தெரு
முகப்பேர் மேற்கு, சென்னை - 600 037.
கைபேசி : 9940190616

ISBN : 978-81-958085-4-0